


சென்னை, எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை சென்னை 2023 போட்டியையொட்டி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இந்திய அணித்தலைவர் ஹர்மன்பிரீத் சிங், சீனா அணித்தலைவர் சாங்லியாங் லின், கொரியா அணித்தலைவர் லீ நாம் யங், பாகிஸ்தான் அணித்தலைவர் உமர் பூட்டா, ஜப்பான் அணித்தலைவர் மசாகி ஒசாவ்ஷி, மலேசியா அணித்தலைவர் மார்கன் ஜலில் ஆகியோர் தமிழ்நாட்டின் பாரம்பரிய வேட்டி, சட்டையில் பரிசுக் கோப்பையுடன் நேற்று முன்தினம் (8.8.2023) புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் அமைதிப்பேரணி கரூர் மாவட்ட திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் கரூர் 80 அடி சாலையில் இருந்து புறப்பட்டது. பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

### ஆவின் நிறுவனத்தின் நிருவாக மேம்பாட்டிற்காக

# திருச்சி IIM உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் முன்னிலையில்

சென்னை, ஆக. 10 -

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தில் நேற்று முன்தினம் (8.8.2023) மாலை ஆவின் நிறுவனத் தின் நிருவாக மேம்பாட்டிற்காக திருச்சி IIM உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்ததாவது:

ஆவின் நிறுவனத்தின் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காகவும், மனிதவள மேம்பாட்டை உறுதிப்படுத்தவும், ஆலோசனைகள் வழங்குவதற்காகவும், முறையான மேலாண்மை செய்வதற்காகவும் அதன்மூலம் நிறுவனத்திற்கு அதிக பயன் கிடைக்கின்ற விதத்தில் தொழில்நுட்ப மேம்பாட்டை உறுதிப்படுத்தி ஆவின் சேவைகளை மேம்படுத்த திருச்சி IIM உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். நிச்சயமாக இது ஆவின் நிருவாகத்தின் வளர்ச்சிக்கு ஒரு மைல் கல்லாக அமையும்.

ஆவின் நிறுவனம் சிறந்த கட்டமைப்பு உள்ளது அனைத்து பிரிவுகளிலும் உள்ள ஊழியர்களுக்கு அவர்கள் துறை சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க இருக்கிறோம். விவசாயிகளுக்கு உடனடி ஒப்புகைச் சீட்டு (Spot Acknowledgement) வழங்கும் முறை மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. ஆவின் நிருவாகத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 6.9% மின்சாரம் சேமிக்கப்பட்டு சுமார் 30 லட்சம் ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளது. 200க்கும் மேற்பட்ட புதிய சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளது அனைத்து மாவட்டங்களிலும் பால் உப பொருட்களின் தரம் மற்றும் சுவை ஒரே மாதிரியான அளவை கொண்டதாக விரைவில் செயல்படுத்தப்படும்.

இந்நிகழ்வில், பால்வளத் துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.வினீத், டாக்டர் பவன் குமார் சிங், இயக்குனர் IIM திருச்சி, சரவணன், பேராசிரியர் IIM திருச்சி கலந்து கொண்டனர்.

### தமிழ் அகராதியியல் நாள் விழா 2023

# அகராதி ஆய்வு மலருக்குக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன!

சென்னை, ஆக. 10 -

‘தமிழ் அகராதியியலின் தந்தை’ என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் ஆண்டுதோறும் நவம்பர் 8ஆம் நாள் ‘தமிழ் அகராதியியல் நாளாகக்’ கொண்டாடப்படுவதோடு, நவம்பர் 08 ஆம் நாளில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டுவருகிறது.

நடப்பு 2023-2024ஆம் ஆண்டிற்கான பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் பங்கேற்க ஆர்வமுள்ள தமிழார்வலர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் உட்பட அனைவரும் பின்வரும் பொருண்மைகளில் 5 பக்க அளவில் ஆய்வுக் கட்டுரைகளை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்கு வழங்கப்படும் ஆய்வுக் கட்டுரைகளில் தேர்வுக்குழுவால் தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் மட்டுமே ‘தமிழ் அகராதியியல் நாள்’ சிறப்பு ஆய்வு மலரில் இடம் பெறும்.

**தலைப்புகள்:**

1. மின்னகராதி காலத்தின் தேவை 2. கலைச்சொல்லாக்கமும் ஊடகத்துறையும் 3. குமுக வலைத்தளங்களில் கலைச்சொல் பயன்பாடு 4. கலைச்சொல்லாக்கமும் மொழிவளர்ச்சியும் 5. கணினித் தமிழ்வளர்ச்சியில் சிக்கல்களும் தீர்வுகளும் 6. தமிழ்ப் பத்தி இலக்கியங்களில் காணப்படும் கலைச்சொற்கள் 7. ஓலைச்சுவடிகளில் காணப்படும் அருந்தமிழ்ச்சொற்கள் 8. கலைச்சொல்லாக்கமும் திரைத்துறையும் 9. தமிழில் மொழிக் கலப்பைக் களைதல் 10. வட்டார வழக்கில் சொல்லாக்கம் 11. தமிழ் அகராதியியலின் தோற்றமும் வளர்ச்சியும் 12. அகராதி வளர்ச்சியில் மேலை நாட்டினரின் பங்கு உள்ளிட்ட தலைப்புகளில் கட்டுரைகளை ஏ4 அளவில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் மருதம் ஒருங்குறி (யுனிகோடு) எழுத்துருவில், எழுத்தளவு 11 புள்ளி, வரி இடைவெளி 1.5இல், சொற்செயலிக்கோப்பாக (Word Document file) agarathimalar2020@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும், “இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம், நகர் நிருவாக அலுவலக வளாகம், முதல் தளம், எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை, மே.ரா.செ. நகர், சென்னை - 600 028” என்ற இயக்கக முகவரிக்கும் 15.09.2023 ஆம் நாள் மாலை 5.00 மணிக்குள் கிடைக்கு மாறு அனுப்பிவைக்க வேண்டும்.

கட்டுரையாளர்கள் கட்டுரையுடன் முகவரி, கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி, கடவுச்சீட்டு அளவிலான (Passport size Photo) ஒளிப்படம், ஒரு பக்க அளவில் தன்விளக்கக் குறிப்பு ஆகியவற்றையும் கட்டாயம் இணைத்து அனுப்ப வேண்டும். மேலும், அனுப்பப்படும் ஆய்வுக் கட்டுரை இதற்கு முன் வேறு எந்த இதழ்களுக்கும் வழங்கப் பெறவில்லை என்ற உறுதிமொழியையும் தன்னொப்பமிட்டு (self attested) அனுப்ப வேண்டும். கட்டுரைகள் அடிக்குறிப்புகள் மற்றும் துணைநூற்பட்டியலுடன் அமைதல் வேண்டும்.

### கைத்தறி நாள்:

# கோ-ஆப்டெக்ஸில் கைத்தறி விற்பனை நிலையம்!

## அமைச்சர் ஆர்.காந்தி திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 10 -

1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7ஆம் நாள் அன்று தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தின் நினைவாக கைத்தறி தொழிலின் முக்கியத்துவம் மற்றும் அதன் பாரம்பரியம் மற்றும் நமது கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் தன்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக 2015ஆம் ஆண்டு முதல் தேசிய கைத்தறி நாள் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டில், 07.08.2023 அன்று 9வது தேசிய கைத்தறி நாள் சென்னை, எழும்பூர், கோஆப்டெக்ஸ் வளாகத்தில் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி கைத்தறி நெசவின் மூலம் தயார் செய்யப்படும் துப்பட்டாக்கள், பைகள், வீட்டு உபயோகத் துணிகள் மற்றும் தோடர் கை வேலைபாடு துணி இரகங்கள் உள்ளிட்ட பிரத்யேகமான கைத்தறி விற்பனை செய்ய கோஆப்டெக்ஸில் கைத்தறி அலங்கார பொருட்கள் விற்பனை நிலையம் (Handloom Accessories Shop) கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இளம் கைத்தறி நெசவாளர்களுக்கான நெசவு பயிற்சி மையம் நெசவு தொழில் சார்ந்த தொழில் முனைவோராக மாற்றுவதற்காகவும், சென்னை கோஆப்டெக்ஸில் நெசவாளர் பயிற்சி மையம் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு 20 நபர்களுக்கு பயிற்சி சேர்க்கை ஆணை வழங்கப்பட்டது.

கைத்தறி துணி இரகங்களை மதிப்பு கூட்டி உள்நாட்டில் சந்தைப்படுத்துவது மட்டுமின்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய கூடிய வகையில் கைத்தறி இரகங்களுக்கு அதிக விற்பனை விலை ஈட்டும் பொருட்டு, கைத்தறி துணி 1) எம்ப்ராய்டரி பயிற்சி மையம், 2) கைத்தறி துணி அச்சிடுதல் பயிற்சி மையம், 3) கைத்தறி துணி சிக்கன் காரி எம்ப்ராய்டரி பயிற்சி மையம் மற்றும் 4) கைத்தறி துணி ஆரி(AAri) வேலைபாடு பயிற்சி மையம் கோஆப்டெக்ஸில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், துறையின் வடிவமைப்பு மேம்பாடு முயற்சியின் ஒரு பகுதியாக கைத்தறி இரகங்களில் சந்தைப்படுத்த கூடிய இரகங்களை உற்பத்தி மேற்கொள்ள ஏதுவாகவும், நவீன காலத்திற்கேற்ப கைத்தறி இரகங்களில் நவநாகரீக வடிவமைப்புகளை உடுத்தும் பொருட்டு தேசிய வடிவமைப்பு மையம், அகமதாபாத் மற்றும் தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு நிறுவனம், பெங்களூரு மற்றும் சென்னை ஆகியவை மூலம் உருவாக்கப்பட்ட 1000 புதிய வடிவமைப்புகள் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் ஒன்பதாவது தேசிய கைத்தறி திருநாள் கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. மேற்படி புதிய வடிவமைப்புகளில் உருவாக்கப்பட்ட கைத்தறி பட்டு மற்றும் பருத்தி சேலை இரகங்களை வாடிக்கையாளர்கள் தாம் விரும்பும் வடிவமைப்புகளை உண்மையிலேயே தாம் அணிவது போன்று மெய்நிகர் காட்சி மூலம் (Virtual Reality) ஆடைகளை தேர்வு செய்துக்கொள்வதற்கு ஏதுவாக கோஆப்டெக்ஸில் நிறுவப்பட்டுள்ள மெய்நிகர் ஆடை அலங்கார கணினி வசதி மையத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஜவுளித் தொழிலின் நுட்பங்கள், வடிவமைப்பு மற்றும் காலமாற்றத்திற்கேற்ற வண்ணங்களின் போக்கினை கணித்தல் ஆகியவற்றில் பங்களிப்பு திறன் கொண்ட வடிவமைப்பாளர்களை கண்டறிந்து ஊக்குவிக்கும் பொருட்டும், தமிழ்நாடு அரசால் 2022 23ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மாநில அளவிலான சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருது வகையில், விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்ற முதல் மூன்று விருதாளர்கள் போக 22 இளம் வடிவமைப்பாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரூ.10,000/ வீதம் ஊக்கத்தொகை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஆணையும், முத்ரா கடன் திட்டத் தின் கீழ் 20 பயனாளிகளுக்கு கடனுதவி ஆணையும் மற்றும் நெசவாளர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு வீட்டு மனை பதிவு ஆணையும் இந்து சமயஅறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும், தேசிய கைத்தறி நாளை முன்னிட்டு கைத்தறி துறை சார்பாக மாவட்ட அளவில் கொண்டாடப்பட்ட விழாக்களில் முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 33 பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஆணையும், நெசவாளர் முத்ரா கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 304 பயனாளிகளுக்கு ரூ.2.08 கோடி கடனுதவி ஆணையும், நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு ரூ.49.16 இலட்சம் மற்றும் நெசவாளர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 18 நகர்புற பயனாளிகளுக்கு வீடுகட்டும் பணி ஆணையும் வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளிடையே தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கதர் மற்றும் கைத்தறி இரகங்களின் தனித்தன்மை, கலை நுணுக்கம், பாரம்பரியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அதன் விற்பனையினை ஊக்குவிக்கவும் கைத்தறி இரகங்களை பிரபலப்படுத்தும் திட்டம் (Handloom Outreach Programme) செயல்படுத்தப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் கைத்தறி தொழில் முனைவோர்களாக உருவாக இயலும். மேலும் கலைஞர் நூற்றாண்டு விழவினை முன்னிட்டு கைத்தறி துறை மற்றும் கோஆப்டெக்ஸ் இணைந்து 100 கல்லூரிகளில் இத்திட்டனை செயல்படுத்த திட்டமிடப் பட்டு, தேசிய கைத்தறி நாளன்று 30 கல்லூரிகளில் விழப்புணர்வு கூட்டம் நடத்தப்படுகிறது. மேலும் கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை உதவியுடன் 60 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது.

இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை பெருநகர மேயர் திருமதி. ஆர்.பிரியா, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஐ.பரந்தாமன், சென்னை பெருநகர துணை மேயர் எம். மகேஷ் குமார், பெருமாநகர சென்னை மாநகராட்சி 61வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பாத்திமா முசாபர் அஹமது, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன், துணிநூல் துறை ஆணையர் முனைவர். மா. வள்ளலார், தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரிய முதன்மை செயல் அலுவலர் முனைவர். சீ.சுரேஷ்குமார், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் கோஆப்டெக்ஸ் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் பணியாற்றி வரும் சென்னை மாநகராட்சி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம், மின்சார வாரியத்தின் அலுவலர்கள், தூய்மைப்பணியாளர்கள் என 1600 பேருக்கு சென்னை மேற்கு மாவட்டக் கழகம் ஏற்பாட்டில், நேற்று முன்தினம் மதியம் அறுசுவை உணவு வழங்கினர். இந்நிகழ்வில் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, அப்பணியாளர்களுக்கு நல உதவிகள் வழங்கி தூய்மைப்பணியாளர்களுடன் அமர்ந்து உணவு உண்டு மகிழ்ந்தார். தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., பகுதிச் செயலாளர்கள் எஸ்.மதன்மோகன், ஏ.ஆர்.பி.எம். காமராஜ் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி தர்மபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு ஒன்றியச் செயலாளர் சி.முத்துக்குமார் தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சுமார் 1000 க்கும் மேற்பட்டோர் மௌன ஊர்வலமாக நடந்து சென்று கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் மாநில,மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.